# திருத்தங்கல் நகராட்சி

## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் ஆனி திங்கள் 15 நாள் **29–06–2018** ம் தேதி வெள்ளிக்கிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். முகம்மது சாகுல் ஹமீது, எம்.இ.,**

திருத்தங்கல் நகராட்சி
நாள் . 25–06–2018

**தனிஅலுவலர்**
**திருத்தங்கல் நகராட்சி**

**பொருள் எண் – 102**

இந்நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வந்த **3** பேஸ் மின்சப்ளை **29.05.2018** அன்று காலை சரியாக **11** மணிக்கு மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டு மின் சப்ளையில் தடை ஏற்பட்டது. எனவே மேற்படி தீ விபத்தினால் சேதமடைந்த மின் வயர்களை புதிதாக மாற்றி அமைத்து நகராட்சி அலுவலகத்திற்கு மின் சப்ளையினை தங்குதடையின்றி இயக்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. **2,00,000/–** க்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1525/2018/இ1)

**பொருள் எண் – 103**

வழக்கு எண் W.P.(M.D)No.12427/2018 வழக்கிற்கு நகராட்சி சார்பில் வழக்காட திரு. எம். ராஜராஜன் வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் வேண்டி திரு . எம். ராஜராஜன் B.A.,B.L., அவர்கள் ரூபாய். **10,000/–**(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) க்கு டிமாண்ட் ரசீது கொடுத்துள்ளதால் வழக்கறிஞர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழங்கி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1771//2018/எப்1)

**பொருள் எண் – 104**

திருத்தங்கல் நகராட்சியில் குளோரினேசன் மாத்திரைகளை வாங்கி குடிநீரை சுத்தம் செய்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் பணிக்கு பொதுநிதித்திட்டம் **208–19** கீழ் கண்ட பணிக்கு **28.03.2018** தீர்மான எண் **49**ன் படி மன்றம் ஒப்புதல் பெறப்பட்டதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு **14.06.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரா் பெயா் திருவாளா்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம்(%குறைவு &கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | திருத்தங்கல் நகராட்சி குளோரினேசன் மாத்திரைகள் சப்ளை செய்யும் பணி | 2.00 | Fancy Association | 1.27%கூடுதல் |
| | | | Almas Traders | 10.76%கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட **1.27%** கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரா் Fancy Association அவா்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு–**

அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 767/இ1/2018)

**பொருள் எண் –105**

திருத்தங்கல் நகராட்சி 2016–17 ம் ஆண்டு கணக்கு சரி பார்த்து முடித்தமைக்கு அதற்கான தொகை ரூ. 25000/–ஐ ஆலோசகர்(consultant) திரு. ப. சீனிவாசன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வேலையின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2888/2016/சி1)

**பொருள் எண் –106**

இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டிற்கு தேவையான எழுதுப் பொருட்கள் படிவங்கள், பதிவேடுகள், கணிணிக்கு தேவையான டோனர்கள் மற்றும் இதரப் பொருட்களை வாங்குவதற்கு அதற்கான விலைப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1649/2018/எப்1)

**பொருள் எண் –107**

அரசாணை எண். 39 நாள். 17.04.2018ன் படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிக்கப்படும் குடிநீர் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 01.12.2017 முதல் 31.03.2018 வரை நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.9.00/1கி.லி (ஒன்பது ரூபாய்– ஆயிரம் லிட்டருக்கு) மற்றும் 01.04.2018 முதல் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.9.45/1 கி.லி (ஒன்பது ரூபாய் நாற்பத்தி ஐந்து காசுகள்– ஆயிரம் லிட்டருக்கு) என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1936/2018/இ2)

**தனிஅலுவலர்**
**திருத்தங்கல் நகராட்சி**